***கவனிக்க.*** *-2024.08.23 ஆந் திகதிய 2399 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2400- 2024 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2024.08.30**

*2400 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1859 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1856 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1857 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, செத்தெம்பர் மாதம் 06ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1855- B 082604 - 5,403 (2024/08)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - திருகோணமலை
## வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை- 2024.09.19

திருகோணமலை நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாத கீழ் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2024.09.19 ஆந் திகதியன்று மாலை 3.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ( ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இவ் வழக்குச் சான்றுப்பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏல விற்பனையிலிருந்து குறித்த பொருட்கள் மீளப் பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

4. வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும், காசோலைகள் ஏற்றுகொள்ளப்படமாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குபவர்கள் தமது அளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

இ. பயஸ் றெஸ்ஸாக்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை,
2024, ஓகத்து 20.

**உரிமைகோரப்படாத மோட்டார் வாகனங்கள்**

| தொ. இல. | வழக்கு இலக்கம் | வாகன இல. |
|---|---|---|
| 01 | | UZ-0158 |
| 02 | MC/2330/19 | BGE -2937 |
| 03 | BR/325/ 16 | MQ- 0796 |
| 04 | PR/193/ 07 | 122-2779 |
| 05 | - | 103- 8913 |
| 06 | AR/ 927/ 21 | UV- 0642 |
| 07 | | BIX-4638 |
| 08 | BR/ 1144/ 20 | BIA- 1976 |

| தொ. இல. | வழக்கு இலக்கம் | வாகன இல. |
|---|---|---|
| 09 | BR/ 787/ 20 | MQ- 0100 |
| 10 | | GK- 8382 |
| 11 | BR/ 184/ 20 | BGT- 2896 |
| 12 | PR/ 30/ 19 | BCI-7492 |
| 13 | - | 141- 8697 |
| 14 | - | VB- 1415 |
| 15 | MC/5238/ 19 | HW- 2949 |
| 16 | MC/ 5030/ 19 | 148- 2693 |
| 17 | - | BDL- 7307 |
| 18 | - | BJB- 1906 |

*08- 209*

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

**2025 ஆம் ஆண்டுக்காக கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

**திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவு**

*2025ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2025ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2024.10.02ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*கள்ளுத் தவறணையை குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில் இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.*

*கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2024.10.02ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.

மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2024.10.30ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.

இச் சலுகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிதியில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

டபிள்யூ. டபிள்யூ. எம்.டீ. குமாரி,
பிரதேச செயலாளர்,
திவுலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலப்பிட்டிய,
2024,ஓகத்து 15.

**அட்டவணை**

| இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 27 -தாகொன்ன | திவுலப்பிட்டிய | தாகொன்ன | முற்பகல் 11.00<br>பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 8.00 | 4,000 | 2024.10.02<br>முற்பகல் 10.30 |

08-197

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## நிறுவனத்தின் பெயர் மாற்றம் குறித்த பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் படி குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் பெயர் 2024, யூலை 29 முதல் மாற்றப்பட்டுள்ளது என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.*

*நிறுவனத்தின் முன்னாள் பெயர்:* எல்லா அல்பைன் ரிஸோர்ட் ( பிரைவேட்) லிமிடெட்

*பதிவிலக்கம்:* PV 00207394
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* 18, பீட்டர்சன் லேன் , கொழும்பு -06
*நிறுவனத்தின் புதிய பெயர்:* அல்பைன் வெஞ்சர்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்

சபையின் கட்டளைப்படி,

ரவிடிஸ் நாணயக்கார,
கம்பனிச் செயலாளர்.

08- 198

---

## இறுதிக்கூட்டத்திற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 341(1) இன் கீழ்

டீ.என்.பீ. காமென்ட்ஸ் லங்கா ( பிறைவெட்) லிமிடட் ( PV8628)
( கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல்)

கூட்டத்தில் ஒழிப்போனின் இறுதிக் கணக்குகளை கடன்தருநர்களிடம் சமர்ப்பித்து அது தொடர்பில் பரிசீலனை செய்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கம்பனி கடன்தருநர்களின் இறுதிக் கூட்டம் எதிர்வரும் 2024, ஒற்றோபர் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணியளவில் கொழும்பு 06, ஹெவ்லொக் வீதி, இல. 291/ 2 எனும் முகவரியில் நடைபெறவுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

முகமட் சுஹைர் முகமட் அஷ்ரப்,
ஒழிப்போன்.

2024.08.15.

08- 214/2

## இறுதிக்கூட்டத்திற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 341(1) இன் கீழ்

டீ.என்.பீ. காமென்ட்ஸ் லங்கா ( பிறைவெட்) லிமிடட் ( PV8628)
( கடன்தருநர்களின் தன்னிச்கையான ஒடுக்குதல்)

கூட்டத்தில் ஒழிப்போனின் இறுதிக் கணக்குகளை பங்குதாரர்களிடம் சமர்ப்பித்து அது தொடர்பில் பரிசீலனை செய்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கம்பனி கடன்தருநர்களின் இறுதிக் கூட்டம் எதிர்வரும் 2024, ஒற்றோபர் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் கொழும்பு 06, ஹெவ்லொக் வீதி, இல. 291/ 2 எனும் முகவரியில் நடைபெறவுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

முகமட் சுஹைர் முகமட் அஷ்ரப்,
ஒழிப்போன்.

2024.08.15.

08- 214/1

## பொது அறிவித்தல்

## L.B.பினான்ஸ் ( PQ156)

சட்டத்தின் 239 ஆம் பிரிவின் பிரகாரம், L.B. பினான்ஸ் பிஎல்சீ ( கம்பனி பதிவிலக்கம் PQ 156) உடன் மல்டி பினான்ஸ் பிஎல்சி ( கம்பனி பதிவிலக்கம் PB891PQ) இன் ஒன்றிணைவிற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244 ஆம் பிரிவின் 3ஆம் உப பிரிவின் பிரகாரமான பொது அறிவித்தல்

L.B. பினான்ஸ் பிஎல்சீ உடன் மல்டி பினான்ஸ் பிஎல்சி இன் உத்தேசிக்கப்பட்டதும் கொழும்பில் விநியோகிக்கப்பட்டதும் 2024, மே 28 ஆந் திகதியன்று த ஐலண்ட் மற்றும் திவயின ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் 2024, மே 28 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் இணைந்து வாசிக்கப்பட்ட தினகரன் பத்திரிகையில் 2024, மே 31 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்டதும் மேற்கூறப்பட்ட ஒன்றிணைவு அறிவித்தல் தொடர்பாக 2024, மே 22 ஆந் திகதியன்று அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னைய அறிவித்தலுக்கு மேலதிகமாக ஒன்றிணைவானது இப்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஒன்றிணைவின் செயல்வலுப்பெறும் திகதியானது 2024, யூலை 25 ஆந் திகதியென 2024, யூலை 30 ஆந் திகதியன்று வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டுள்ள ஒன்றிணைவு சான்றிதழை வழங்கப்பட்டுள்ள திகதியாகுமென இத்தால் நாம் அறிவித்தல் வழங்குகின்றோம்.

L.B. பினான்ஸ் பிஎல்சீ இன் சபையின் கட்டளையின் பிரகாரம்,

தரங்கா டி நந்தசேன,
கம்பனிச் செயலாளர்.

2024, ஓகத்து 21.

08- 228